**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, SINGAMPUNARI**

**STC. No. 21 /2021 PW.2**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ஜெயசங்கர் | தந்தை/கணவர் பெயர்: காயாம்பு | |
| ஊர் | : | தாலுகா | : |
| வயது | : | தொழில் | : |
| ஜாதி | : | சமயம் | : இந்து |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 02.07.2026

---

**(எதிரி ஆஜரில்லை. எதிரி சார்பில் BNSS பிரிவு 355ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)**

**<u>02.07.2026 முதல் விசாரணை:</u>**

1. நான் தற்போது அய்யாப்பட்டியில் குடியிருந்து விவசாயம் செய்கிறேன். அ.சா.1 யைத் தெரியும். எதிரியைத் தெரியும். எனது ஊரைச் சேர்ந்தவர்கள். கடந்த 23.05.2020ம் தேதி மாலை 05.00 மணிக்குமேல் எங்கள் ஊர் நாலு ரோட்டில் உள்ள சக்தி என்பவரது கடையில் நானும், மாணிக்கமும் இருந்த போது அ.சா.1 அவரது வீட்டின் பக்கத்தில் இருந்து நாலு ரோட்டில் ஏறுவதற்காக இரு சக்கர வாகனத்தில் வந்து கொண்டிருந்தார்.

2. எதிரி ராஜா படியான் கோவில் செல்லும் ரோட்டில் உள்ள பாலத்தில் அமர்ந்திருந்தார். அ.சா1 யை பார்த்து எதிரி நில்லுடா என்று கூறினார். அ.சா1 வாகனத்தை நிறுத்தி என்ன மாப்பிள்ளை என்று கேட்டார். அப்போது ராஜா, பெர்னாட்ஷா வை கன்னத்தில் அறைந்து வண்டியை பிடித்து தள்ளியதில் பெர்னாட்ஷா கீழே விழுந்து விட்டார். அருகே இருந்த தென்னை மட்டையை வைத்து ராஜா, அ.சா.1 யை முதுகிலும், கையிலும் அடித்தார்.

3. அசிங்கமான வார்த்தைகளால் திட்டி , நாயக்க பயலே உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என கூறி அ.சா1 யின் தலையில் அடிக்க போனார். அ.சா.1 கையை வைத்து தடுத்து விட்டார். நான், சக்திவேல், மாணிக்கம் ஆகியோர் சென்று எதிரியை தடுத்து விலக்கினோம். அ.சா1 யின் கை வீங்கியிருந்தது. எனவே சக்திவேல் மேற்படி இருசக்கர வாகனத்தில் அ.சா.1 யை அழைத்து சென்றார். எதிரியும் அங்கிருந்து சென்று

விட்டார். பின்னர் விசாரித்த போது அ.சா.1 காவல் நிலையத்தில் புகார் கொடுத்துவிட்டு மருத்துவமனைக்கு சென்றதாக கூறினார். போலீசார் என்னை ஊரில் வைத்து விசாரித்தார்கள். காவல் நிலையம் வருமாறு அறிவுறுத்தினார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:</u>

4. சம்பவம் நடந்து எத்தனை நாட்கள் கழித்து போலீசார் விசாரித்தார்கள் என்றால் ஊரில் மறுநாள் விசாரித்தார்கள். பின்னர் 1 வாரம் கழித்து காவல் நிலையத்தில் விசாரித்தார்கள். எனது வாக்குமூலத்தை டைப் செய்து , படித்து காண்பித்து கையொப்பம் வாங்கினார்கள். என்னிடம் காட்டப்படும் கு.வி.மு.ச 161(3) வாக்குமூலத்தில் எனது கையொப்பம் இல்லை. நானும், எதிரியும் பேசி கொள்வது இல்லை என்றாலும், இருதரப்பினாராக இருக்கிறோம் என்றால் சரிதான். ஆனால் நான் எதிரியுடன் நல்லமுறையில் பேசி கொள்வேன்.

5. அ.சா 1 எந்த திசையிலிருந்து எந்த திசை நோக்கி வந்தார் என்று சொல்லவில்லை என்றால் சரிதான். ஆனால் அவர் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி வந்தார். அவ்வாறு வரும் போது மேற்கில் உள்ள பாலம் அருகே சம்பவம் என்றால் சரிதான். சம்பவ நடந்ததாக சொல்லப்படும் பாலத்திலிருந்து 3–4 அடி தொலைவில் கடைகள் உள்ளது. பாலத்திற்கும், பெட்டி கடைக்கும் இடையே முறையூர் செல்லும் தென்வடல் நெடுஞ்சாலை உள்ளது என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் நான் சம்பவம் இடத்தில் இருந்திருந்தால் சம்பவ இடம் குறித்து தெளிவாக சாட்சியம் அளித்திருப்பேன் என்றால் சரியல்ல.

6. எதிரிக்கும், அ.சா.1 க்கும் சண்டை நடக்கும்போது எவ்வளவு நேரம் கழித்து வந்தேன் என்றால் சண்டை நடப்பதற்கே முன்பே நான் கடையில் இருந்தேன். 10–15 நிமிடம் கழித்து சண்டையை விலக்கிவிட வந்தேன். சம்பவ இடத்தில் 10–15 நபர்கள் இருந்தார்கள். எதிரி பயன்படுத்திய தென்னைமட்டையை போலீசார் கைப்பற்றினாக்களா என்றால் தெரியவில்லை. நான் வீட்டில் இருக்கும் போது வீட்டில் வைத்து விசாரித்தார்கள்.

7. எனது வீடு சம்பவ நடந்ததாக சொல்லப்படும் இடத்திலிருந்து கால் பரலான் தூரம் இருக்கும் என்றால் சரிதான். நான் அ.சா.1 யுடன் மருத்துவமனைக்கு உடன் செல்லவில்லை. எத்தனை மணிக்கு புகார் கொடுத்தார்கள். யார் மீது கொடுத்தார்கள்

என்றால் மணி தெரியாது. எதிரி மீது புகார் கொடுத்தார். நான் சொல்வது போல் எதிரி, அ.சா.1 யை அசிங்கமாக பேசி அடித்து தாக்கவில்லை என்றாலும் எதிரி மீது உள்ள முன்பகை காரணமாக அ.சா.1 க்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அ.சா.1 க்கு எந்த காயமும் கிடையாது என்றாலும், அ.சா.1 க்கு உள்ள இருதய நோய்க்கு சிகிச்சை பெறுவதற்கு மருத்துவமனை சென்றார் என்றால் சரியல்ல. எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி அரசு மற்றும் குற்றம்சாட்டப்பட்டவர்கள் தரப்பு வழக்குரைஞர்களுக்கு முன்பாக சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
சிங்கம்புணரி.